# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.138 of 2017
Prosecution Witness No.P.W.44 (L.W.74)

| | | | |
|---|---|---|---|
| Name | Elumalai | Caste | BC Sengunthar |
| Father's Name | T.Natarajan | Calling | Junior Engineer, TNPHC |
| Village | Vellore | Religion | |
| Taluk | Vellore | Age | 60 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 26.02.2025.

(A3 absent. His absence condoned u/s 317 of Cr.P.C. petition filed. A1, A2 and A4 to A6 present)

**முதல் விசாரணை தொடங்கிய நேரம் மதியம் 02.27 P.M.**

நான் தற்போது வேலூர் மாவட்டம் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி கழகத்தில் இளநிலை பொறியாளராக 2011-ல் பணியில் சேர்ந்து இன்றுவரை அதே பதவியில் அதே ஊரில் பணியாற்றி வருகிறேன்.

பழைய காவலர்கள் குடியிருப்பை இடித்துவிட்டு புதியதாக குடியிருப்பு கட்டுவதற்கு அதிகாரியாக நான் பணியாற்றி வரும் நிலையில் பள்ளிக்கொண்டா காவல் நிலையத்திற்குண்டான காவலர் குடியிருப்புக்காக ஒரு உதவி ஆய்வாளர் குடியிருப்பு, இரண்டு தலைமை காவலர் குடியிருப்பு மற்றும் ஒன்பது காவலர் குடியிருப்புகளை நான் கடந்த மே 2015-ல் ஆய்வு செய்தபோது பழுதடைந்து நிலையில் இருந்தன. அந்த உதவி ஆய்வாளர் குடியிருப்பில் காவல் ஆய்வாளர் திரு. மார்டின் பிரேம்ராஜ்

தங்கியிருந்தார். அவர் இந்த வழக்கின் ஒன்றாம் எதிரி. அவரை சாட்சி பார்த்து அடையாளம் காட்டுகிறார். 1–ம் எதிரி மார்ட்டின் பிரேம்ராஜ் காவல் ஆய்வாளர் என்ற நிலையிலும் தற்காலிகமாக காவல் உதவி ஆய்வாளர் குடியிருப்பில் நான் ஆய்வுக்கு சென்றபோது தங்கியிருந்தார்.

மேற்படி பள்ளிக்கொண்டா காவல் நிலையத்திலிருந்த 12 குடியிருப்புகளும், அல்லாபுரத்தில் இருந்த மகளிர் காவல் நிலையத்திற்கு உட்பட்ட காவலர் குடியிருப்புகளில் 16 குடியிருப்புகளும் சேர்ந்து மொத்தம் 28 குடியிருப்புகளுக்கான இடித்து அப்புறப்படுத்துவதற்கான அரசாங்க 60 ஆயிரம் மதிப்பிலான மதிப்பிட்டு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது.

மேற்படி 28 குடியிருப்புகளும் பழுதடைந்திருந்தது (Condemned). 10.07.2015–ல் திறந்த ஒப்பந்த புள்ளியும், முடிய ஒப்பந்த புள்ளியும் பெறப்பட்டன. பின்பு முறைப்படி அந்த கட்டிடம் 15.07.2015 உதவி செயற்பொறியாளர் விழுப்புரம் மூலம் இடிக்க உத்தரவு வந்தது. 29.08.2015–ல் H.ரபி ஒப்பந்ததாரர் மூலம் அந்த 28 காவல் குடியிருப்புகளும் இடித்து சுத்தப்படுத்தப்பட்டது.

சிபிசிஐடி டிஎஸ்பி, ஆய்வாளர், எஸ்ஐ ஆகிய மூன்று பேர் வந்து பள்ளிக்கொண்டா காவல் நிலைய குடியிருப்பு இடித்தது தொடர்பான ஆவணத்தை கேட்டார்கள். நான் ஒரு ஒளிநகல் ஆவணத்தை கொடுத்தேன். அந்த ஆவணம் அ.த.சா.ஆ.67. அந்த ஆவணம் ஒளிநகல் ஆவணம் என்பதால் எதிரிகள் தர்ப்பில் அதை குறியீடு செய்வதற்கு ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது. அது குறித்து இறுதி விசாரணையில் வாதுரைக்கலாம். சிபிசிஐடி போலீசார் என்னை விசாரித்தனர்.

**1ம் எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு உயர் அதிகாரி உதவி செயற்பொறியாளர் வேலூர் உபக்கோட்டம் ஆகும். என்னுடைய உதவி செயற்பொறியாளர் சொல்லும் வேலைகளை நான் செய்ய வேண்டும் என்றால் சரிதான்.

என்னால் குறியீடப்பட்ட அ.த.சா.ஆ.67 ஆவணத்தை என்னுடைய உயர் அதிகாரி போலீசாரிடம் தரச்சொல்லி எந்த ஒரு எழுத்து மூலமாக சொல்லவில்லை. போலீசார் என்னை விசாரித்தபோது நான் சொன்னதை அவர்களுடைய மடிக்கணினியில் தட்டச்சு செய்துக்கொண்டார்கள். மடிகணினியில் யார் தட்டச்சு செய்தார்கள் என்றால் டிஎஸ்பி தட்டச்சு செய்தார்.

உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தில் உள்ள அனைத்து ஆவணங்களும் யாருடைய பொறுப்பில் இருக்கும் என்றால் உதவி செயற்பொறியாளரின் பொறுப்பில்தான் இருக்கும். நான் அளித்த ஆவணங்களுக்கு பொறுப்பானவர் உதவி செயற்பொறியாளர் என்று போலீசாரிடம் சொன்னேன். நான் கொடுத்த ஆவணத்தை அலுவலகத்திலிருந்து எடுப்பதற்கு உதவி செயற்பொறியாளரிடம் எந்த உத்தரவும் பெற்றேனா என்றால் இல்லை.

ஒரு ஒப்பந்தப்புள்ளி முடிவடைந்த பிறகு அது தொடர்பான ஆவணங்கள் கோட்டப் பொறியாளர் அலுவலகம், விழுப்புரத்தில் இருக்கும். போலீசார் வந்து ஒரு ஆவணத்தை என்னிடம் கேட்டால் உயர் அதிகாரியிடம் சொல்லிவிட்டுதான் கொடுக்க வேண்டும். அலுவல் சார்ந்த கோப்புகளை உயர் அதிகாரியிடம் எழுத்து மூலமான உத்தரவு பெற்றுதான் தர வேண்டும். என்னால் குறியிடப்பட்ட அ.த.சா.ஆ.67 ஆவணம் அலுவலக ஆவணம் அல்ல.

அ.த.சா.ஆ.67 ஆவணம் எங்களது அலுவலக நோட்டீஸ் போர்டில் பொதுமக்கள் பார்வைக்கு ஒட்டியிருந்தது. அதை நகல் எடுத்து போலீசாரிடம் கொடுத்தேன். போலீசார் என்னிடம் ஒளிநகல் ஆவணம் கொடுத்தால் கூட போதும் என்றனர். நோட்டிஸ் போர்டில் உள்ள டெண்டர் நோட்டிஸை எடுத்து கொடுக்கட்டுமா என்று என்னுடைய உயர் அதிகாரியான உதவி செயற்பொறியாளரிடம் கேட்டேன். அவர் கொடுக்கச் சொன்னார். அதன் அடிப்படையில் நான் எடுத்து கொடுத்தேன்.

போலீஸ் அதிகாரிகள் டெண்டர் நோட்டிஸ் ஆவணத்தை எதற்காக வேண்டும் என்று என்னிடம் சொல்லவில்லை. அ.த.சா.ஆ.67 ல் நோட்டிஸ் போர்டு காப்பி என்று இல்லை. சிபிசிஐடி போலீசார் சொல்லிக்கொடுத்து அ.த.சா.ஆ.67 ஆவணத்தை நோட்டிஸ் போர்டில் இருந்து கிழித்து கொடுத்தேன் என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய அலுவலக கோப்பில் உள்ள டேகிலிருந்து எடுத்துக்கொடுத்தேன்.

2015-ல் எங்களுடைய அலுவலகம் வேலூர் கோட்டை சுற்று சாலை எண்.60 போலீஸ் மண்டபத்திற்கு பக்கத்தில் இருந்தது. Condemned Quarters என்பதற்கு சரியான தமிழ் அர்த்தம் பயன்படுத்துவதற்கு தகுதியற்றது என்றால் சரிதான்.

அந்த பள்ளிக்கொண்டா காவலர் குடியிருப்பை ஆய்வு செய்து அறிக்கை கொடுக்க வேண்டும் என்று எழுத்து மூல உத்தரவு கொடுத்தார்களா என்றால் இல்லை. எந்தெந்த குடியிருப்பில் யார் யார் தங்கியிருந்தார்கள் என்பதற்கான எந்தவொரு ஆவணத்தையும் நான் பார்க்கவில்லை.

சிபிசிஐடி போலீசாரிடம் எந்த வழக்கின் எண் பற்றியும் சொல்லவில்லை. பள்ளிக்கொண்டா காவலர் குடியிருப்புகளுக்கு யார் Estate Officer (சொத்து அதிகாரி) பொறுப்பு என்றால் மாவட்ட காவல் கண்காணிப்பாளர், வேலூர் ஆவார். நான் சொன்ன பள்ளிக்கொண்டா காவலர் குடியிருப்புகள் எந்நெந்த அதிகாரிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது என்று நான் தெரிந்துக்கொள்ளவில்லை.

அந்த குடியிருப்புக்கான பெயர் பலகை எதுவும் இல்லை. இடிப்பதற்கு முன்பு அந்த குடியிருப்புகளை போட்டோ எடுத்தேன். அந்த போட்டோவை போலீசாரிடம் கொடுத்தேனா என்றால் இல்லை. போலீசார் கேட்கவில்லை அதனால் தரவில்லை. குடியிருப்புகளை ஒதுக்கீடு செய்வதற்கான பதிவேடு உண்டு. அதைப்பற்றி நான் கேட்டு தெரிந்துக்கொள்ளவில்லை.

அங்கு எந்தெந்த போலீசார் தங்கியிருந்தார்கள் என்று கேட்டு தெரிந்துக்கொண்டேனா என்றால் கேட்டுத் தெரிந்துக்கொள்ளவில்லை. ஒரே ஒரு காவல் உதவி ஆய்வாளர் குடியிருப்பு இருந்தது. அந்த உதவி ஆய்வாளர் குடியிருப்பை யாருக்கு ஒதுக்கீடு செய்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. அந்த உதவி காவல் ஆய்வாளர் குடியிருப்பை காவல் ஆய்வாளருக்கு ஒதுக்கீடு செய்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது.

16.05.2015–ல் நான் சென்று காவலர் குடியிருப்பை பார்த்தபோது மார்டின் பிரேம்ராஜ் அவர்கள் காவல் உதவி ஆய்வாளர் குடியிருப்பில் தங்கியிருந்தார். இந்த விவரத்தை நான் சிபிசிஐடி போலீசார் விசாரித்தபோது சொல்லவில்லை.

கட்டிடங்களை ஆய்வு செய்வதற்காக ஒரு டைரியை நான் பராமரிக்க வேண்டும் என்றால் சரிதான். அந்த டைரியை போலீசாரிடம் நான் ஒப்படைக்கவில்லை. நான் அந்த குடியிருப்பை பார்த்தேன் என்பதும் பொய் என்றும் அங்கு மார்டின் பிரேம்ராஜ் அந்த குடியிருப்பில் தங்கியிருந்தார் என்று சொல்வதும் பொய் என்றும் சிபிசிஐடி போலீசார் சொல்லிக்கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

என்னுடைய டைரியில் காவல் உதவி ஆய்வாளர் குடியிருப்பில் திரு. மார்டின் பிரேம்ராஜ் காவல் ஆய்வாளர் தங்கியிருக்கிறார் என்றும் மற்ற குடியிருப்பில் மற்ற காவலர்கள் தங்கியிருக்கிறார்கள் என்றும் எழுதவில்லை. மார்டின் பிரேம்ராஜ் எந்த ஒரு குடியிருப்பில் தங்கியிருந்தார் என்று எந்த ஒரு ஆவணத்தையும் பார்க்கவில்லை என்றாலும் அது குறித்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

அது காவல் உதவி ஆய்வாளர் குடியிருப்பு என்பதற்கான ஆவணம் எதையும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். அந்த குடியிருப்புகளை இடிப்பதற்கான உத்தரவை என்னிடம் கொடுத்திருக்கிறார்கள். அந்த உத்தரவை போலீசார் என்னிடம் கேட்கவில்லை, அதனால் நான் தரவில்லை. ஒரு காவல் உதவி ஆய்வாளர் குடியிருப்பு என்று அதில் உள்ளது. ஆனால் அதில் எந்த ஒரு எண்ணும் குறிப்பிடவில்லை.

ஒரு குடியிருப்பை இடிப்பதற்கு முன்பு செயற்பொறியாளரிடம் உத்தரவு பெற வேண்டும். அந்த குடியிருப்பை இடிப்பதற்கு அந்த குடியிருப்பு தங்குவதற்கு பாதுகாப்பு அற்றது என்று ஆணை என்னிடம் இல்லை.

அந்த குடியிருப்பை நான் பார்க்கவில்லை என்றும் பார்த்தது போல் சிபிசிஐடி போலீசார் சொல்லிக்கொடுத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் குடியிருப்பை பார்த்ததாக சொல்லக்கூடிய காலக்கட்டத்தில மார்டின் பிரேம்ராஜ் பள்ளிக்கொண்டா காவல் நிலைய பணியில் இல்லை என்றும் அவர் வேறு ஒரு பணியில் இருந்தார் என்றும் நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**2 முதல் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1ம் எதிரியின் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்கிறார்.

**5ம் மற்றும் 6ம் எதிரிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை**

1ம் எதிரியின் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்கிறார். அனுமதியுடன் தொடர் குறுக்கு விசாரணை.

**மறுவிசாரணை– இல்லை**

**விசாரணை முடிவுற்ற நேரம் மாலை 03.35 மணி**

PERUMALSAMY MURUGAN

Digitally signed by PERUMALSAMY MURUGAN
Date: 2025.02.26 16:24:46 +0530